தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 ஏப்ரல் 26, செவ்வாய்க்கிழமை

சித்திரை 13, பவ-திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 381, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு நிதி அமைச்சர்.

381--

தமிழக அரசு லாட்டரிச் சீட்டு பரிசுத் தொகையை உடன் வழங்குதல்

**23365--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழக அரசு லாட்டரிச் சீட்டு பரிசுத் தொகை உடன் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பரிசுத் தொகையை உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு விதி 37ன்படி, பரிசுத் தொகைப் பெற குலுக்கல் நடைபெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் விண்ணப்பிக்கப்பட வேண்டும். விதி 36(g)ன்படி, ரூ.10,000/- வரை பரிசு பெற்றவர்கள் அங்கீகாரம் பெற்ற அரசுப் பரிசுச் சீட்டு முகவர்களிடம் பரிசுச் சீட்டினைக் கொடுத்து உடனே பரிசுத் தொகையினைப் பெற்றுக் கொள்ளலாம். முகவர்கள், அப்பரிசுச் சீட்டினை பரிசுச் சீட்டு இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்து அடுத்த புதிய குலுக்கலுக்கான பரிசுச் சீட்டினை விற்பனைக்குப் பெற்றுக் கொள்வார்கள். எனவே, ரூ. 10,000/– வரையிலான பரிசுத் தொகை முகவர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

ரூ. 1,00,000/- மற்றும் அதற்கு மேலான பரிசுத் தொகைகளைப் பெற்றுக் கொள்ள பரிசுக்குரியவர், தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் குலுக்கல் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் இயக்குநர் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். தமிழ்நாடு பரிசுச் சீட்டு விதி 37ன்படி, பரிசு விழுந்தாலும் கிழிந்த நிலையில் உள்ள மற்றும் எண்கள் திருத்தப்பட்ட பரிசுச்சீட்டுகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுவதில்லை. 60 நாட்களுக்குப் பிறகு விண்ணப்பிக்கப்படும் பரிசுத் தொகைக்கான கோரிக்கை எந்த ஒரு சூழ்நிலையிலும் பரிசீலிக்கப்படுவதில்லை. எனவே, 60 நாட்களுக்குள் பெறப்படும் விண்ணப்பங்களை மட்டும் 60 நாட்களுக்குப் பிறகு ஆய்வு செய்து பொதுவாக 90 நாட்களுக்குள் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இம்முறை போலி பரிசுச் சீட்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், பரிசுத் தொகை உரியவருக்கு போய்ச் சேருவதற்கும் மற்றும் அரசுக்கு எந்தவித நிதி பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஆய்வு செய்யும் முறை முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளுக்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு குறைபாடுகள் இல்லாமல் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகளில் தில்லுமுல்லு செய்து ஏமாற்ற முயற்சி செய்த காரணத்தையொட்டி, பரிசுத் தொகை அளிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இதுவரை அரசுக்கு சேர்ந்துள்ள மொத்தத் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் இப்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகளில் எண் திருத்தம் செய்து கவுண்டர் கிரைம் காரணமாக நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குகள் எத்தனை? அரசுக்கு உண்டான வரியைச் செலுத்திவிட்டால் தனியார் லாட்டரி நடத்த அரசு அனுமதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லியிருக்கின்றேன். அதற்கு மேலும் வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றபோது, அந்த வழக்குகள் பற்றிய விவரங்களை எல்லாம் சேகரித்து, அதில் முடிவு செய்யப்பட்டவைகள், முடிவு செய்யப்படாதவைகள் என்று சொல்லவேண்டுமென்றால், அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் முழுவதும் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரவேல், மூலக் கேள்வி கேட்டதே நீங்கள். அதற்குத் துணைக் கேள்வி எப்படிக் கேட்கவேண்டும் என்பது உங்களுக்கே தெரியவேண்டும். இல்லை என்றால் மூலக் கேள்வி யாருடைய கேள்வியோ என்பதைப் போல வரும். திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுப் பரிசுச் சீட்டில் பரிசு விழுகிற தொகையில் எத்தனை விழுக்காடு அரசுக்குக் கிடைக்கிறது, எத்தனை விழுக்காடு பரிசு விழுந்தவர்களுக்குக் கிடைக்கிறது என்பதையும், ஒரு நம்பர் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் அதிகமாக விற்பனை ஆகிறதே, அதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு விழுந்தவை எவை, மற்றவர்களுக்கு விழுந்தவை எவை என்பது குறித்து ஒவ்வொரு பரிசுச் சீட்டிலும் தனித் தனியாகக் கணக்கெடுக்க வேண்டும். கணக்கெடுத்து, பெற்றுக் கொண்டவர்கள், பெற்றுக் கொள்ளாதவர்கள் என்ற முறையிலே கணக்கிடவேண்டும். அதை இப்போது கூறுவதற்கில்லை. ஆனால் இந்த விதிமுறைகளுக்குப் புறம்பாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பாகவோ, இருக்கின்ற ஏற்பாடுகளுக்குப் புறம்பாகவோ யாரும்

எப்படிப்பட்ட லாட்டரிச் சீட்டுகளை அல்லது வேறு பல தன்மைகளை கையாண்டாலும், முறைப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், பொதுவாக வேறு பல மாநிலங்களிலிருந்து பரிசுச் சீட்டு வருவதைத் தடுக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தும், உச்ச நீதிமன்றம் சென்று அவர்கள் தடையாணை பெற்று இருக்கிறார்கள்; அதற்கு ஒரு திட்டவட்டமான தீர்ப்பு வருகின்ற வரையில் அவற்றை எல்லாம் தடுக்க முடியாது. ஆனால், ஒரு நம்பர் என்ற அளவுக்கு வருகின்றபோது, அது சூதாட்டமாகவும், வேறு பல வகைகளிலேயும் அமைகின்ற காரணத்தினால் அதைத் தடுப்பதற்கு உரிமை இருக்கிறது. அது எங்கெங்கே நடைபெறுகிறது என்பதை காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். அப்படி எங்கேயாவது இருந்து அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படாமல் இருக்குமேயானால், கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிற சூழ்நிலை ஏற்படுமேயானால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழக அரசுப் பரிசுச் சீட்டு வெளி மாநிலத்திலே அச்சடிக்கப்படுவதாக அறிகின்றேன். அது உண்மையா? நம்முடைய தமிழகத்திலேயே அச்சடித்துக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலேதான் அச்சடிக்கப்படுகிறது. மிகவும் பாதுகாப்பான தன்மையில், தமிழகத்தினுடைய அச்சகத்திலே அதற்கு என்று ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அதற்கென்று விலை உயர்ந்த மதிப்புள்ள இயந்திரங்களுக்கும் வாங்கி வைக்கப்பட்டு இங்கேயே நடைபெறுகிறது ; வெளி மாநிலங்களுக்குக் கொடுப்பது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு லாட்டரிச் சீட்டு பரிசுத் தொகை அளிக்கும் போது, முதல் பரிசு பெற்றவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதத்திற்கு, 5 சதவீதம் மதிப்பிற்கு லாட்டரிச் சீட்டுகளே திரும்பவும் அளிக்கப்படுமா? ஏனெனில் அந்த லாட்டரிச் சீட்டுகளுக்கு திரும்பவும் பரிசு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படிச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் விழுகின்ற லாட்டரிச் சீட்டில், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலே இருக்குமேயானால் அதிலே 40 சதவீதம் மத்திய அரசு வரி விதித்து எடுத்துக் கொள்கிறார்கள். அதற்குக் கீழே இருக்கின்ற தொகைகளுக்கு வரி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று 5 சதவீதம் என்கின்ற நிலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்தும் லாட்டரிச் சீட்டின் மூலம் அரசு வருடந்தோறும் பெறுகின்ற வருவாய் எவ்வளவு? இதை மேலும் அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மேலும் வளர்க்க வேண்டும் என்கின்ற ஒரு நல்ல எண்ணம் இருக்கிறது. ஆனால், பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த பரிசுச் சீட்டுகள் எல்லாம் தமிழகத்திலேதான் வந்து விற்பனை ஆகின்றன. பொதுவாக, இப்போது எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் அதிகமான அளவு பரிசுச் சீட்டுகள் விற்கிற மாநிலம் தமிழகமாகத்தான் இருக்கிறது. ஆகவேதான் பிற மாநிலங்களினுடைய பரிசுச் சீட்டுகள் வராமல் தடுக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால், அப்போது தமிழகத்தினுடைய பரிசுச் சீட்டு அதிகமான அளவுக்கு விற்பனை ஆவதற்கு வழி வகைகள் ஏற்படும். ஆனால், அதன் காரணமாக ஆண்டுதோறும் வருகின்ற வருமானம் எவ்வளவு என்று திட்டவட்டமாக இப்போது கூறுவதற்கு இல்லை. என்றாலும், கிட்டத்தட்ட 2 கோடியில் இருந்து 2½ கோடி அளவுக்கு தமிழக பரிசுச் சீட்டின் மூலம் வருமானம் கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சில ஏஜெண்டுகள் எல்லா மாநிலங்களிலிருந்தும் பரிசுச் சீட்டுகளை வாங்கி, ஒரு குறிப்பிட்டதை அரசாங்கத்தில் இருந்து பெறுகிறார்கள். அதைப் போல பல மடங்கு இவர்களே அச்சடித்து மக்களுக்கு வெளியிட்டு பெரிய கோடீஸ்வரர்களாக ஆகி இருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிட்ட சிலரை நான் தங்களுக்கு நேரில் வந்து சொல்கிறேன். நீங்கள் அவர்கள் மேல் ஆக்ஷன் எடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையிலும் மிகக் கண்டிப்பாகவும், அதற்கான விதிமுறைகளை எல்லாம் கட்டுப்பாடாகவும் நாம் நிறைவேற்றி வருவதன் காரணமாக, இதிலே தில்லுமுல்லுகளோ மற்றவைகளோ செய்வதற்கு எந்த வகையிலும் வழி கிடையாது. ஏனென்றால் அச்சடித்துத் தருகின்ற முழுப் பொறுப்பையும், விநியோகிக்கின்ற முழுப் பொறுப்பையும் நாமேதான் வைத்துக்கொண்டு இருக்கிறோம். தனியார் பரிசுச்சீட்டு ஏஜெண்டுகளோ மற்றவர்களோ பரிசுச் சீட்டுகளை அச்சடிக்க முடியாது. ஆனால், பிற மாநிலங்களிலிருந்து வருகின்ற பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற குறைபாடுகள் ஏராளம் இருக்கின்றன. அநேகமாக பரிசுச் சீட்டுக்காரர்களுக்கு மொத்தமாக கான்ட்ராக்ட் பேசிஸில் சில மாநில அரசுகள் பணத்தை வாங்கிக்கொண்டு, அவற்றை அடித்து வெளியிடுகின்ற பொறுப்பை அந்த ஏஜெண்டுகளுக்கே விட்டு விடுகிறார்கள். அவர்கள் தங்கள் இஷ்டம்போல ஒன்றுக்குப் பல என்று அடித்து விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதை நாம் தடுக்க முடியாது. அந்தந்த அரசுகள்தான் தடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 382, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

382--

நீதிபதி மாலிமத் குழு அறிக்கையைப் பரிசீலித்தல்.

****21701--*திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிப்பது பற்றி நீதிபதி மாலிமத் கமிட்டி கொடுத்த அறிக்கையைப் பரிசீலிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

முற்பகல் *10.10*

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முடிவுறாமல் நடப்பிலிருந்து வருகிற வழக்குகளை முடிவு செய்வதற்காக ஜஸ்டிஸ் மாலிமத் குழு செய்துள்ள பரிந்துரைகள் 1992 அக்டோபர் 17, 18 தேதிகளில் பெங்களூரில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டன. அக்கூட்டத்தில் சட்ட